# குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், செஞ்சி

முன்னிலை: திரு.R.மனோகரன், B.A.,B.L.,
குற்றவியல் நீதித்துறை நடுவர், செஞ்சி.

**வழக்கு எண்.C.C.173/2018**

2024 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22ம் தேதி திங்கள் கிழமை குற்றம் முறையிடுபவரின் சார்பாக வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது விதியின் ஏற்பாட்டின்படி) உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

**அ.சா. 3**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : இந்துமதி | தொழில் | : விவசாயம் |
| கணவர் பெயர் | : கிருஷ்ணமூர்த்தி | சமயம் | : |
| கிராமம் | : நெய்வானத்தம் | சாதி | : |
| வட்டம் | : திருவண்ணாமலை | வயது | : 58 |

சாட்சியையும் எதிரியும் ந.பி.பெற்றாள் காவல் நிலையத்தின் நீதிமன்ற காவலர் திருமதி. உலகேஸ்வரி WP.C. - 2074 என்பவரால் அடையாளம் காட்டப்பட்டது.

**(1 முதல் 5 எதிரி ஆஜர்.)**

**முதல் விசாரணை**

**1.** நான் நெய்வானத்தம் கிராமத்தில் வசித்து வருகிறேன். அ.சா.1 கிருஷ்ணமூர்த்தி என் கணவர். அ.சா.2 உலகநாதன் என் மகன். ஆஜர் எதிரிகள் எங்கள் ஊரை சார்ந்தவர்கள்.

2. கடந்த 06.06.2016 ந் தேதியன்று காலையில் எங்கள் நிலத்திற்கு வந்து பால் கறப்பதற்காக வந்தேன். அப்போது மூர்த்தி, துரை, ராமச்சந்திரன் ஆகியோர்கள் நின்று கொண்டிருந்தார்கள். அப்போது பாலை எடுத்து கொண்டு வந்தபோது என் மகன் உலகநாதனை மூர்த்தி, துரை(எ) பூபாலன், ராமச்சந்திரன் ஆகியோர்கள் கம்பி, தடியால் அடித்தார்கள். அவ்வாறு அடிப்பதற்கு முன்பாக உலகநாதனின் முகத்தில் துணியை போட்டு மூடிவிட்டு அடித்தார்கள். நான் கத்தி முகத்தில் உள்ள துணியை எடுத்தேன். அந்த வழியாக வந்த இருசக்கர வாகனத்தில் என் மகனை எனது வீட்டில் விடுமாறு சொன்னேன். வீட்டிற்கு சென்று பிறகு ந.பி.பெற்றாள் மருத்துவமனைக்கு சென்றோம். அங்கு செஞ்சி அரசு மருத்துவமனைக்கு போகுமாறு சொன்னார்கள். செஞ்சி அரசு மருத்துவமனையில் என் மகன் உலகநாதனுக்கு 10 தையல்கள் போட்டார்கள். என் மகனுக்கு ஒடிப்பு மாதிரி வந்தது. மேல்சிகிச்சைக்காக பாண்டிக்கு போக சொன்னார்கள். மேல்சிகிச்சைக்கு பாண்டிக்கு சென்று சிகிச்சை எடுத்தோம். 5 நாள் கழித்து மீண்டும் செஞ்சி மருத்துவமனைக்கு போக சொன்னார்கள் அதன்படி செஞ்சி அரசு மருத்துவமனைக்கு

வந்து சிகிச்சை எடுத்தார். என் மகன் மருத்துவமனையில் இருந்தபோது நான் உடன் இருந்தேன். என் மகனை மருத்துவமனையில் போலிசார் விசாரித்தனர்.

**குறுக்குவிசாரணை:**

என் கணவருக்கு குமரனும், அவரது மனைவி அம்சவள்ளியும் நிலம் விற்பனை செய்தார்கள் என்றால் சரிதான். ஆஜர்எதிரிகள் வண்ணார் சமூகத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். கிரையத்திற்கு முன்பாகவே பத்திரத்தை என் கணவரிடம் கொடுத்தார்கள் என்றால் அது எனக்கு தெரியாது. கிரையத்திற்கு பிறகு நிலத்தில் குறைபாடு உள்ளது என்று பிரச்சனை வந்தது என்றால் நிலம் குறைவதாக பிரச்சனை வந்தது. நிலம் குறைவது சம்மந்தமாக என் கணவர் தான் பேசினார் என்றால் ஆமாம். நிலம் குறைந்தது சம்மந்தமாக குறைந்த இடத்திற்கு பணத்தை கொடுத்தார்கள் என்றால் அது தெரியாது. உலகநாதனுக்கும் எதிரிக்கும் சண்டை நடந்தபோது நான் அங்கு இல்லை என்றால் ஆரம்பிக்கும்போது நான் அங்குஇல்லை. சண்டை நடந்த போது வந்துவிட்டேன். எனக்கு யாரேனும் தகவல் சொன்னார்களா என்றால் இல்லை. பால் சொசைட்டிக்கும், சண்டை நடந்த இடத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 1/2 கி.மீ இருக்கும். நான் வந்து பார்த்தபோது என் மகன் ரத்த காயத்தோடு இருந்தாரா என்றால் ஆமாம். என் மகன் அடித்ததாக சொன்னாரா என்றால் அடித்ததை நான் தான் பார்த்தேன். நான் வந்தபிறகு அடித்தார்களா என்றால் இல்லை. எவ்வளவு தூரத்தில் அடித்ததை பார்த்தேன் என்றால் கோர்ட் வாசற்படி அளவில் பார்த்தேன். சம்பவம் நடந்த இடத்தில் எதிரிகளை பார்த்தேனா என்றால் எல்லோரும் கம்பி, கோல் வைத்துகொண்டு அங்குதான் இருந்தார்கள். சத்தம்போட்டு கூப்பிட்டேனா என்றால் சத்தம்போட்டேன். ரோட்டில் சென்றவர்கள் 4, 5 பேர் ஓடி வந்தார்கள். என் மகன் சட்டை ரத்த கரையாக இருந்ததா என்றால் ஆமாம். என் மகனால் வண்டி ஓட்டிச் சென்றாரா என்றால் இல்லை. அவரால்முடியவில்லை. யாரால் மருத்துவமனைக்கு சென்றால் என்றால் வீட்டிற்கு வழியே வந்தவர் வீட்டில் விட்டார். அதன்பிறகு மருத்துவமனைக்கு சென்றோம். மருத்துவமனைக்கு செல்லாமல் ஏன் வீட்டிற்கு சென்றோம் என்றால் கையில் பணம் ஏதும் இல்லாததால் வீட்டில் விடுமாறு அந்த வழியே வந்தவரிடம் சொன்னேன்.

06.06.2016 ந் தேதி எங்கள் மாடு எதிரிகள் நிலத்திற்கு பயிரை மேய்ந்ததால் அவர்கள் கட்டி வைத்தார்கள் என்றால் அது சம்பவத்திற்கு முன்பாக 1 மாதம்

இருக்கும். அவ்வாறு மாடு கட்டி வைத்திருந்த பிரச்சனையில் நாங்கள் எதிரிகளை சராமரியாக தாக்கினோம் என்றால் இல்லை. குமரனும், அவரது மனைவியை தவிர மற்றவர்கள் வெளியூரில் வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். எங்களுக்கு எதிராக எதிரிகள் காவல் நிலையத்தில் புகார் கொடுக்க சென்றேபோது அவர்களை மடக்கி நாங்கள் தாக்கினோம் என்றால் என் கணவர் இல்லை. அவ்வாறு யாரும் தாக்கவில்லை. நான் கூறுவது பொய் என்றாலும் என் கணவரால் தாக்கியதால் என் மகனுக்கு காயம் ஏற்பட்டது என்றாலும் சரியல்ல. என்னுடன் மருத்துவமனைக்கு என் கணவர் வந்தாரா என்றால் வந்தார். மருத்துவரிடம் சம்பவம் குறித்து யார் சொன்னது என்றால் என் கணவர் சொன்னார். போலிசார் என்னை இந்த வழக்கு சம்மந்தமாக விசாரித்தாரா என்றால் இல்லை. என் மகனை தான் விசாரித்தார்கள். போலிசார் என்னிடம் விசாரித்து இருந்தால் என் மகனை முகத்தில் துணியை கட்டி அடித்த விவரத்தை நான் சொல்லியிருப்பேன் என்றால் ஆமாம்.

06.06.2016 ந் தேதி நாங்கள் எதிரிகளை தாக்கியதாக எங்களுக்கு எதிராக வழக்கு பதிவு செய்யப்பட்டு சி.சி.நெம்பர் 172/2018 என்ற வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். நிலம் பிரச்சனையில் எங்களுக்கு எதிராக உள்ள வழக்கில் இருந்து தப்பிக்க தன்னிச்சையாக ஏற்பட்ட காயத்தை கொண்டு எதிரிகளுக்கு எதிராக புகார் கொடுத்தோம் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**மறுவிசாரணை:**

இல்லை

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு,
சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/
படித்து காண்பிக்கப்பட்டு அது சரி
என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
செஞ்சி.